தமிழ்பிராமி எழுத்து வகைகளும் தொல்காப்பியர் காலமும்

ந. தட்சணாமூர்த்தி M.A (தமிழ்)

முன்னுரை

தமிழில் கிடைக்கும் கல்வெட்டுகளில் மிகவும் பழைமையானவை தமிழ்பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகள் ஆகும். இவற்றைப் பல அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். இத்துறையில் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் மிகவும் முயன்று உழைத்து ஆராய்ந்துள்ளார். தமிழ்பிராமி எழுத்துகளையும் அடுத்துத் தோன்றிய தொடக்ககால வட்டெழுத்துகளையும் பற்றி அவர் ஆராய்ந்து எழுதி வெளியிட்ட, 'Early Tamil Epigraphy' என்ற நூல் இத்துறையில் எழுதப்பட்ட மிக உயர்ந்த ஆய்வுநூல் ஆகும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளவற்றையும் தமிழ்பிராமிக் கல்வெட்டுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து தொல்காப்பியத்தின் காலம் பற்றிய தன் முடிவை அந்நூலில் அவர் கூறியுள்ளார். அதைப் பற்றி மேலும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பிராமியும் தமிழ்பிராமியும்

வட இந்தியாவில் பல பகுதிகளில் பாறைகளில் ஏதோ எழுதப்பட்டிருப்பதைப் பலரும் பார்த்தாலும் அவற்றில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எவருக்கும் புரியாமல் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஜேம்ஸ் பிரின்செப் என்ற அறிஞர் அவற்றை ஆராய்ந்து அவற்றைப் படிப்பதில் வெற்றி பெற்றார். அவை 2200 ஆண்டுகளுக்கு முன் அசோக மன்னனால் எழுதி வைக்கப்பட்ட கல்வெட்டுகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவை சமஸ்கிருதத்தின் முந்தைய மொழியான பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்தன. இந்த எழுத்துமுறையின் பெயர் பிராமி எனப் பின்பு முடிவு செய்தனர். அதே எழுத்துகள் தமிழ்நாட்டிலும் சில இடங்களில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் நீண்ட காலமாக அவற்றைத் தொல்லியல் அறிஞர்களால் படிக்க முடியவில்ல. பின்பு கே.வி.சுப்பிரமணிய ஐயர் என்ற அறிஞர் அவை தமிழ் மொழியில் எழுதப்பட்டவை என்பதைக் கண்டுபிடித்து அவற்றைப் படித்தார். எனினும் அவற்றைப் படிப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருந்ததால் பல்வேறு அறிஞர்கள் அவற்றைப் படிப்பதில் முனைந்து ஈடுபட்டனர். இத்துறையில் பெரும் ஆராய்ச்சி செய்த அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ் பிராமி கல்வெட்டுகளில் மூன்று வகைகள் இருப்பதையும் பிராமி எழுத்துமுறையில் தமிழுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்பட்டு தமிழ்பிராமி எழுதப்பட்டதையும் விளக்கினார். இவ்வாறு செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றிப் புரிந்து கொள்ள சமஸ்கிருத, பிராகிருத மொழிகளைப் பற்றியும் தமிழ் மொழிக்கும் அவற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றியும் அறிதல் மிகவும் தேவை.

சமஸ்கிருத, பிராகிருத மொழிகள்

சமஸ்கிருதம் வடநாட்டின் மிகப் பழைமையான மொழி. வடமொழி எனப்படும் அம்மொழியில் உள்ள ரிக் வேதமே உலகில் உள்ள பெரிய நூல்களுள் காலத்தால் மிகவும் முற்பட்டது எனலாம். அது கி.மு. 1500க்கு முன் தோன்றியது என்பது அறிஞர் கருத்து. அதைத் தொடர்ந்து தோன்றிய பெரும் எண்ணிக்கையிலான பழங்கால நூல்கள் வடமொழியில் உண்டு. சமஸ்கிருதத்தின் பேச்சுமொழித் திரிபே பிராகிருதம் எனலாம். பிராகிருதச் சொற்கள் ஏறத்தாழ அனைத்தும் சமஸ்கிருதச் சொற்களின் திரிபுகளே ஆகும். சமஸ்கிருதத்தின் இலக்கணப்படியே பெரும்பாலும் பிராகிருதம் அமைந்திருக்கும். ஒரு சில மாற்றங்கள் மட்டுமே இருக்கும். இயற்றமிழும் பேச்சுத்தமிழும் போன்றவையே சமஸ்கிருதமும் பிராகிருதமும். 'சம்ஸ்கிருதம்' என்றால் செம்மையாகச் செய்யப்பட்டது என்றும் 'பிராகிருதம்' என்றால் இயற்கையாகச் செய்யப்பட்டது என்றும் பொருள். அதாவது மக்கள் வழக்கத்தில் இயல்பாய்ப் பேசும்

திருத்தமற்ற பேச்சு 'பிராகிருதம்' எனவும் அதன் திருத்தமான செம்மை வடிவம் 'சம்ஸ்கிருதம்' எனவும் கூறப்படும். சமஸ்கிருத நாடகங்களில் உயர்ந்த பாத்திரங்கள் சமஸ்கிருதத்தில் பேசுவதாகவும் (இயற்றமிழ் போல), சற்றுத் தாழ்ந்த பாத்திரங்களும் பெண்களும் உயர்ந்த பிராகிருதத்தில் பேசுவதாகவும் (பேச்சுத் தமிழ் போல), கல்வி குன்றிய தாழ்ந்தோர் தாழ்ந்த பிராகிருதத்தில் பேசுவதாகவும் (கொச்சைத் தமிழ் போல) அமைக்கப்பட்டிருக்கும்[1]. பேச்சுத்தமிழ் வெவ்வேறு வட்டார வழக்குகளில் மாறுவதைப் போல, பிராகிருதமும் வெவ்வொரு பகுதியிலும் வெவ்வொரு விதமாகத் திரிந்து வெவ்வேறு பெயர் பெறும். பாலி, அர்த்தமாகதி, சூரசேனி, மகாராஷ்ட்ரி, காந்தாரி போன்றவை பிராகிருதத்தின் வகைகள். இவை இடத்தைப் பொருத்துப் பெயர் பெற்றவை. காலத்தைப் பொருத்தும் இவை வேறுபடக் கூடியவை. இடத்தைப் பொருத்து சமஸ்கிருதத்தில் இது போன்ற வேறுபாடு இராது. காலத்தைப் பொருத்தும் சமஸ்கிருதத்தில் மிகுந்த வேறுபாடு இராது. வேதகால சமஸ்கிருதமும் பிற்கால சமஸ்கிருதமும் நமது சங்க காலத் தமிழும் பிற்காலத் தமிழும் போன்றவை.

புத்தர், மகாவீரர் காலத்தில் அவர்கள் செய்த வாய்மொழி போதனைகளே பின் நூல்களாக எழுதப்பட்டன. அவை பிராகிருத மொழிகளில் உள்ளன. அக்காலத்தில் நன்கு கற்றவர்கள் எழுதும் செம்மையான சமஸ்கிருதத்தில் எழுதாமல் பொதுமக்களின் பேச்சான பிராகிருதத்தை அப்படியே எழுதுதல் பௌத்த, சமண மத நூல்களில் பின்பற்றப்பட்டது. ஆனால் வைதிக நூல்கள் செம்மையான சமஸ்கிருதத்தில் மட்டுமே எழுதப்பட்டன. அக்காலங்களில் பௌத்த, சமண சமயங்கள் அரசர்கள் பலரது ஆதரவைப் பெற்றதால் பிராகிருதமே ஆட்சி மொழி போல் ஆதிக்கம் பெற்றது. அக்காலக் கல்வெட்டுகளிலும் இதுவே இடம் பெற்றது. எனினும் சில நூற்றாண்டுகளில் இந்நிலை மாறியது. பிராகிருதப் பயன்பாடு குறைந்து சமஸ்கிருதப் பயன்பாடு மிகுந்து கி.பி. 4 ஆம் நூற்றாண்டளவில் பிராகிருதம் முற்றிலும் மறைந்துவிட்டது. இடத்திலும், காலத்திலும் மாறும் பிராகிருதத்தின் தன்மையும், மாறாத செம்மையுடைய சமஸ்கிருதத்தின் தன்மையும் இதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும். அதன் பின் பௌத்த, சமண நூல்கள் கூட சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டன.

பிராமிக் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டவை பிராகிருதத்திலேயே உள்ளன. சற்றுப் பிற்பட்ட காலத்தில்தான் சமஸ்கிருதக் கல்வெட்டுகள் தோன்றுகின்றன. இதைப் பற்றி கூறும் அறிஞர் ரிச்சர்டு சாலமன், 'நடுக்கால இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கு (பிராகிருதம் போன்றவை) தாயான சமஸ்கிருதம் தன் வாரிசுகளைவிட மிகத் தாமதமாகவே கல்வெட்டுகளில் தோன்றுவது மிகப் பெரிய முரண்' என்று அறிஞர் லூயிஸ் ரினோ குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுகிறார்[2].

தமிழ்பிராமிக் கல்வெட்டுகளோடு ஒப்பிட வேண்டிய பிராமிக் கல்வெட்டுகள் அனைத்தும் பிராகிருதத்திலேயே உள்ளன. எனினும் அதன் தாயான சமஸ்கிருதத்துடன் சேர்த்து ஒப்பிடுவதே தெளிவு தரும் என்பதால் சமஸ்கிருதம், பிராகிருதம் பற்றிய இந்த விளக்கம் தேவைப்படுகிறது.

பிராமிக்கும் தமிழ்பிராமிக்கும் வேறுபாடுகள்

சமஸ்கிருதத்தில் உள்ள வர்க்க எழுத்துகள் எனப்படும் எழுத்துகள் தமிழில் இல்லை (மா, ப, பா, உா, த, தா முதலியவை). எனவே இவற்றுக்குத் தமிழ்பிராமியில் எழுத்துகள் இல்லை. சமஸ்கிருதத்தில் ஏகார, ஓகார நெடில் எழுத்துகள் மட்டுமே உண்டு. எகர, ஒகரக் குறில் எழுத்துகள் இல்லை. தமிழில் எகர, ஒகரக் குறில் எழுத்துகள் உண்டு. தமிழில் உள்ள ழ, ற, ன ஆகிய எழுத்துகள் சமஸ்கிருதத்தில் இல்லை. பிராமி எழுத்துகளுள் சமஸ்கிருதத்துக்கே உரிய எழுத்துகளைத் தவிர்த்தும் தமிழுக்கே உரிய எழுத்துகளுக்குப் புதிய குறியீடுகளை உருவாக்கியும் தமிழ்பிராமி எழுதப்பட்டது. ழ,ற,ன ஆகிய எழுத்துகளுக்குத் தனிக் குறியீடுகள் தமிழ் பிராமியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் எகர, ஒகரக் குறில்களுக்குக் குறியீடுகள் சேர்க்கப்படவில்லை.

பிராமி எழுத்துமுறை சமஸ்கிருதத்தையும் பிராகிருதத்தையும் எழுத ஏற்றது. மகரத்தை முழுமையாக ஒலிக்காமல் வாயை மூடி மூக்கொலியாக ஒலிக்கப்படும் மகரம் சமஸ்கிருதத்தில் 'அநுஸ்வாரம்'

எனப்படும். இது சொல்லின் நடுவிலும் வரும்; இறுதியிலும் வரும். சமஸ்கிருதத்தில் அநுஸ்வாரம் அல்லாத மெய்யெழுத்துகள் சொல்லின் இறுதியில் வருதல் மிகமிகக் குறைவு. பிராகிருதத்தில் இது அறவே இல்லை. அநுஸ்வாரத்தைக் குறிக்க பிராமியில் புள்ளி பயன்படுகிறது. இது எண்ணிக்கையில் குறைவு. பிராமியின் மெய்யெழுத்து வடிவம் அகரம் சேர்ந்த உயிர்மெய்யையே குறிக்கும். தனி மெய்யெழுத்தைக் குறிக்காது. மெய்யெழுத்தைத் தனியாகக் காட்ட வேண்டிய தேவை ஏற்படும்பொழுது அந்த மெய்யெழுத்து வடிவத்தின் அருகே ஒரு சிறிய கோடு இடப்படும். இது மிகமிகக் குறைவு. பிராகிருதத்தில் அதற்குத் தேவையே இராது. பிராமியில் கூட்டெழுத்து முறை பின்பற்றப்படுகிறது. அதாவது சொல்லின் நடுவில் வரும் மெய்யெழுத்துகள் அடுத்துவரும் உயிரெழுத்தோடு சேர்த்து கூட்டெழுத்தாக எழுதப்படும். சிலசமயம் ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யெழுத்துகள் அடுத்துவரும் எழுத்தோடு சேர்த்து எழுதப்படுவதும் உண்டு.

தமிழ் இதற்கு வேறுபட்டது. மெய்யெழுத்தில் முடியும் சொற்கள் தமிழில் மிகுதி. எனவே அவற்றை அடுத்து வரும் எழுத்தோடு சேர்த்து எழுத முடியாது; தனியாகவே எழுத வேண்டும். எனவே பிராமியின் கூட்டெழுத்து முறையை தமிழ்பிராமி பின்பற்றாமல் தனித்தனியாக எழுதும் முறையைப் பின்பற்றியது. இம்முறையில் ஏற்பட்ட சிக்கல்களால் மூன்று மாறுபட்ட முறைகள் தமிழ் பிராமியில் பின்பற்றப்பட்டன என்பது அறிஞர் ஐராவதம் மகாதேவனின் விளக்கம்[3]. முதல்வகை, மாங்குளம் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் பின்பற்றப்பட்டது[4]. முன் கூறியவாறு, பிராமியின் 'க' என்ற மெய் வடிவம், அகரம் ஏறிய உயிர்மெய்யான 'க' வைக் குறிக்கும்; தனி மெய்யான 'க்' ஐக் குறிக்காது. மாங்குளம் தமிழ்பிராமியில் இது 'க்' ஐக் குறிக்கும். இவ்வாறே பிற மெய்யெழுத்து வடிவங்களும். பிராமியில் 'க' என்பதன் மேல் வலதுபுறம் ஒரு சிறு கிடைக்கோடு இட்டால் அது 'கா' என்ற நெடிலைக் குறிக்கும். மாங்குளம் தமிழ்பிராமியில் இது 'க' வைக் குறிக்கும். அதேசமயம் 'கா' என்பதையும் இதுவே குறிக்கும். இந்த முறையில் குறில், நெடில் இரண்டும் ஒரே வடிவில் இருப்பதால் ஏற்படும் குழப்பத்தை நீக்க, ஆந்திராவில் பட்டிப்புரோலு என்ற இடத்தில் பயன்பட்ட பிராமிவகை ஒரு தீர்வு கண்டது[5]. 'க' என்பதைக் குறிக்கும் மேல்வலது கோட்டுடன் ஒரு சிறு தொங்கும் கோட்டை இணைத்து அது 'கா' ஐச் சுட்டியது. இந்த முறை தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படவில்லை. மாங்குளம் பிராமியில் நெடிலுக்கும் குறிலுக்கும் இடையே உள்ள குழப்பத்துக்கு மாற்றாக இரண்டாவது தமிழ்பிராமி வகை உள்ளது. புகளூர் சேரர் கல்வெட்டுகளில் இது பின்பற்றப்பட்டுள்ளது[6]. பிராமியின் 'கா' இங்கு 'க' எனக் கொள்ளப்படாமல் 'கா' என்றே கொள்ளப்பட்டது. பிராமியின் 'க' இங்கும் 'க' எனக் கொள்ளப்பட்டாலும் 'க்' என்பதற்கும் இதுவே பயன்படுத்தப்பட்டது. எனவே இங்கும் 'க', 'க்' இரண்டுக்கும் இடையே குழப்பம் உள்ளது. மூன்றாவது முறை துல்லியமானது. நெகனூர்பட்டிக் கல்வெட்டிலும் சித்தன்னவாசல் கல்வெட்டுகள் சிலவற்றிலும் இது பின்பற்றப்பட்டுள்ளது[7]. பிராமியின் 'க' இங்கும் 'க' ஐச் சுட்டும். அதே போல் பிராமியின் 'கா' இங்கும் 'கா' வைச் சுட்டும். ஆனால் 'க' வின் மேல் புள்ளி வைக்கப்பட்டால் அது 'க்' ஐச் சுட்டும். 'எ', 'ஒ' என்பவை பிராமி போல் 'ஏ', 'ஓ' வைச் சுட்டும். இவற்றின் மேல் புள்ளி வைக்கப்பட்டால் அவை 'எ', 'ஒ' என்ற குறில்களைக் குறிக்கும். பிராமியையும் மூன்றாம் வகை தமிழ்பிராமியையும் ஒப்பிட்டுப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்,

1. பிராமியிலும் மூன்றாம் வகைத் தமிழ்பிராமியிலும் குறில், நெடில்களுக்கான குறியீடுகள் ஒரே மாதிரியானவை.
2. மெய்களைப் பொருத்தவரை, பிராமியில் அநுஸ்வாரத்துக்குப் புள்ளியிடப்படும். அரிதாக, சொல்லின் இறுதியில் வரும் மெய்யெழுத்தைக் காட்ட அருகில் ஒரு சிறு கோடு இடப்படும். மூன்றாம் வகைத் தமிழ்பிராமியில் மெய்கள் மற்றும் எகர, ஒகரக் குறில்களுக்குப் புள்ளியிடப்படும்.
3. பிராமியில் மெய்யெழுத்தானது பின்னால் வரும் எழுத்துடன் சேர்த்துக் கூட்டெழுத்தாக எழுதப்படும். தமிழ்பிராமியில் எழுத்துகள் தனித்தனியாக எழுதப்படும்.

புள்ளியிட்ட தமிழ்பிராமி முறையே தமிழில் அதன் பிறகு பொதுவாகப் பின்பற்றப்பட்டது. 'பாவலர்' என்ற சொல் வெவ்வேறு முறைகளில் எழுதப்படுவதைக் கீழே உள்ள படம் தெளிவாக்கும்.

தமிழ் - பாவலர்
பிராமி - 𑀧𑀸𑀯𑀮𑀭𑁆
பட்டிப்புரோலு - 𑀧𑀸𑀯𑀮𑀭𑁆
தமிழ்பிராமி I - மாங்குளம் - 𑀧𑀸𑀯𑀮𑀭𑁆
தமிழ்பிராமி II - புகளூர் சேரர் - 𑀧𑀸𑀯𑀮
தமிழ்பிராமி III - நெகனூர்பட்டி - 𑀧𑀸𑀯𑀺

பஞ்சகம், த்ர்யம்பகம் என்ற சொற்கள் பிராமியில் கூட்டெழுத்துகள், அனுஸ்வாரம் கொண்டும், மூன்றாம் வகை தமிழ்பிராமியில் தனியெழுத்துகள், மெய்யெழுத்துப் புள்ளிகள் கொண்டும் எழுதப்படுவதைக் கீழே உள்ள படம் காட்டும்.

தமிழ் - பஞ்சகம் - த்ர்யம்பகம்
பிராமி - 𑀧𑀜𑁆𑀘 - 𑀢𑁆𑀭𑁆𑀬𑀁𑀩𑀓 (□ - 𑀁[3])
தமிழ்பிராமி III - 𑀧𑀜𑁆𑀘𑀓𑀁 - 𑀢𑀺𑀭𑁆𑀬𑀁𑀩𑀓𑀁 (𑀧 - 𑀁[1])

மூன்று வகைத் தமிழ்பிராமிகளின் காலம்

அறிஞர் ஐராவதம் மகாதேவன் மூன்று வகை தமிழ்பிராமிகளின் காலத்தை முதலில் பின்வருமாறு வகைப்படுத்தினார்[8].

1. தமிழ்பிராமி I வகை காலத்தால் முற்பட்டது. இதன்படி மாங்குளம் கல்வெட்டுகள் காலத்தால் முற்பட்டவை. பிராமியில் இருந்து தமிழ்பிராமி முதலில் இந்த முறையிலேயே உருவாகியுள்ளது.
2. தமிழ்பிராமி II அடுத்துத் தோன்றியது. இதன்படி புகளூர் சேரர் கல்வெட்டுகள் சற்றுப் பிற்பட்டவை.
3. தமிழ்பிராமி III கடைசியாகத் தோன்றியது. இதன்படி நெகனூர்பட்டிக் கல்வெட்டு பிற்காலத்தது.

இவை பரிசோதனை முயற்சியாகச் செய்யப்பட்டு பின்பு தமிழ்பிராமி III வகையே நிலைபெற்றது என்பது அவர் கூற்று. தமிழ்பிராமி கல்வெட்டுகளின் காலத்தைக் கணிப்பதில் அவர் இந்த அளவுகோலைப் பின்பற்றினார். இதை மட்டுமின்றி எழுத்தமைதி (எழுத்துகளின் வடிவ அமைப்பு) அடிப்படையிலும் ஒப்பிட்டுக் காலங்களை முடிவு செய்தார்.

முதலில் இவ்வாறு முடிவு செய்த அவர் பிறகு தன் கருத்துகளைச் சற்று மாற்றினார்[9]. கிப்ட் சிரோமணி என்ற அறிஞர் இரண்டாம் வகை தமிழ்பிராமியே பிராமிக்கு நெருக்கமானது எனக் காட்டியதையும், அரிக்காமேடு அகழாய்வில் இரண்டாம் வகை தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புகள் முற்பட்ட காலத்துக்கு உரியனவாக கண்டுபிடிக்கப்பட்டதையும் கணக்கில் கொண்டு பின்வருமாறு முடிவு செய்கிறார். தமிழ்பிராமி I, தமிழ்பிராமி II இரண்டும் சமகாலத்தில் தனித்தனியாக உருவானவை. தமிழ்பிராமி III இவற்றுக்குப் பிற்காலத்தில் உருவானது. எனினும், இரண்டு வேறுபட்ட முறைகள் ஒரே காலத்தில், சீரான மொழி கொண்ட ஒரு சிறிய நிலப்பகுதிச் சமுதாயத்தில் எப்படித் தோன்றியிருக்க முடியும் எனக் கேள்வி எழுப்பி அதற்கு விடை எதுவும் தெரியவில்லை என்று குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தின் காலம்

தொல்காப்பியம் புள்ளியிட்ட எழுத்துகளைப் பற்றிக் கூறுகிறது. தொல்காப்பியத்தில் தமிழ்பிராமி III முறையே கூறப்பட்டுள்ளது. எனவே தொல்காப்பியம் தமிழ்பிராமி III ன் காலத்தைச் சேர்ந்தது. அதாவது அது கி.பி இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஐராவதம் மகாதேவனின் முடிவு[10].

தொல்காப்பியத்தின் காலம் பற்றி பல அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். தொல்காப்பியம் சங்க காலத்துக்கு மிக நீண்ட காலத்துக்கு முன்பு தோன்றியது என்பது மரபுக் கூற்று. தொடக்கத்தில் அறிஞர் கே.என்.சிவராஜப்பிள்ளை தொல்காப்பியர் காலத்தை ஆராய்ந்து சில மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துக்களைத் துணைக்கொண்டு தொல்காப்பியத்தின் காலம் கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்ற ஒரு புதுமையான முடிவைக் கூறினார்[11]. அறிஞர் வையாபுரிப்பிள்ளையும் பல காரணங்களைக் கூறி அதே மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துகளையும் துணைக்கொண்டு தொல்காப்பியத்தின் காலம் கி.பி 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு என முடிவு செய்தார்[12]. இது தமிழறிஞர்களிடம் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. பல அறிஞர்கள் வையாபுரிப்பிள்ளை கூறிய காரணங்களை விரிவாக ஆராய்ந்து அவற்றின் பொருந்தாத் தன்மையை விளக்கியுள்ளனர். தொல்காப்பியம் சங்க காலத்துக்கு முற்பட்டது என்பதை பல காரணங்கள் காட்டி அறிஞர்கள் மு. இராகவையங்கார்[13], ரா. இராகவையங்கார்[14], மயிலை. சீனி. வேங்கடசாமி[15], சி.இலக்குவனார்[16], வெள்ளைவாரணனார்[17], முதலியோர் விளக்கியுள்ளனர். இக்கருத்துகளை ஆராய்ந்து அறிஞர் மா. இராசமாணிக்கனார் வேறு தக்க சான்றுகள் கிடைக்கும்வரை தொல்காப்பியத்தின் காலம் கி.மு 4 ஆம் நூற்றாண்டு எனக் கொள்வதே சிறந்தது என விளக்கினார்[18]. இதையே பெரும்பாலான அறிஞர்கள் ஏற்கிறார்கள். எனினும் கமில் சுவலபில்[19] போன்ற மேலைநாட்டு அறிஞர்கள் இவற்றைக் கணக்கில் கொள்ளாமல் வையாபுரிப்பிள்ளை கூறியவற்றையே அப்படியே ஏற்கிறார்கள்.

தொல்காப்பியம் சங்க காலத்துக்கு முற்பட்டது என்பது பல அறிஞர்களின் உறுதியான முடிவு. சங்க காலம் என்பது ஏறக்குறைய கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2 வரை உள்ள காலமாக இருக்க வேண்டும் என்பது தற்காலத்தில் அறிஞர்கள் ஒருமுகமாக ஏற்கும் கருத்து. எனவே தொல்காப்பியத்தை சங்க காலத்துக்குப் பிற்பட்டதாகக் கூறும் ஜராவதம் மகாதேவன் அவர்களின் முடிவு மேலும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். ஜராவதம் மகாதேவனின் நூலுக்குப் பிறகு நடத்தப்பட்ட அகழாய்வுகளில் புதிய சான்றுகள் பல கிடைத்துள்ளன. அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி, கிடைத்துள்ள புதிய சான்றுகளின் அடிப்படையில் புதிய முடிவுகளை அடைவது ஆராய்ச்சி நெறிகளுக்கு முற்றிலும் ஏற்றதே என்பது தெளிவு. இது அவரின் பெருமையைக் குறைப்பதாகாது எனக் கருதி இது தொடர்பாக மேலும் ஆராய நான் விழைகிறேன்.

மேலைநாட்டு அறிஞர்களின் மேன்மையும், மறுபக்கமும்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல ஐரோப்பிய அறிஞர்கள் இந்தியாவின் மொழி, வரலாறு போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். கீழையியல் அறிஞர்கள் (oriental scholars) எனப்படும் அவர்கள் மிக விரிந்து பரந்த பல துறை அறிவும், மிக நுட்பமான அறிவுக்கூர்மையும், கடினமாக உழைக்கும் திறனும், எதையும் செம்மையாகச் செய்யும் பண்பும் உடையவர்கள். இருண்டு கிடந்த இந்திய வரலாற்றுக்கு ஒளி தந்தவர்கள் அவர்களே. அவர்களுக்கு இந்தியா நன்றிக் கடன்பட்டுள்ளது.

எனினும் அவர்களின் மறுபக்கமாக, சில தன்மைகளையும் குறிப்பிட வேண்டியுள்ளது. அக்காலத்தில் உயர்ந்திருந்த ஐரோப்பியருக்குத் தாழ்ந்திருந்த இந்தியா மீது ஒரு தாழ்வான எண்ணம் இருந்ததில் வியப்பில்லை. இந்தியாவின் காலப்பழைமை மீது அவர்களுக்கு ஒரு பொதுவான அவநம்பிக்கை உண்டு. பைபிளில் கூறப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் உலகம் தோன்றியது 5000 ஆண்டுகளுக்கு முன்புதான் என்ற ஆழமான நம்பிக்கை மேலைநாட்டில் இருந்தது. அறிவியல் வளர்ச்சியால் இது மாறிவிட்டாலும் 19ஆம் நூற்றாண்டில் அந்த நம்பிக்கையின் பாதிப்பு இருந்திருக்கக்கூடும். அக்காலத்து அறிஞர்கள் இந்திய நூல்கள் எல்லாவற்றுக்கும் மிகவும் பிற்பட்ட காலத்தையே கூறினார்கள். இந்தியாவின் சமயமும் பண்பாடும் மேலைநாட்டினரின் சமயம், பண்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதால் இந்தியக் கருத்துகளை அவர்கள் தவறாகப் புரிந்து கொள்வதும் உண்டு. இந்தியாவில் எழுத்து தோன்றியது பற்றியும் சமஸ்கிருத நூல்கள் பற்றியும் அவர்கள் விரிவாக ஆராய்ந்து பல கருத்துகளைக் கூறியுள்ளனர்.

தமிழ்பிராமி எழுத்து பற்றியும் அதன் அடிப்படையில் தொல்காப்பியத்தின் காலம் பற்றியும் ஆராயும்போது மேலைநாட்டு அறிஞர்கள் எழுத்து பற்றியும், தொல்காப்பியத்துடன் தொடர்புபடுத்தப்படும் நூல்கள் பற்றியும் கூறியுள்ள சில கருத்துகளை காண்பது தேவையாகிறது.

எழுத்தும், புத்தகமும் இந்தியாவில் மதிக்கப்படவில்லை என்ற கருத்து

அண்மைக் காலத்து அறிஞர் ரிச்சர்டு சாலமன் இந்தியாவில் எழுத்து முக்கியத்துவம் பெறவில்லை என்றும் வாய்மொழியே முக்கியத்துவம் பெற்றது என்றும் கூறி அதன் காரணத்தை விளக்குவதற்கு, ஒரு அறிஞர் சாணக்கிய நீதியின் ஒரு சுலோகத்தை எடுத்துக் காட்டிக் கூறுவதை மேற்கோள் காட்டி இந்தியர்களின் மனநிலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்[20]. சாணக்கிய நீதியில் உள்ள ஒரு சுலோகம் (16.20), புத்தகத்தில் உள்ள அறிவை ஒருவன் தன்னிடம் நன்கு பெறாவிட்டால் அது பயனில்லை என்ற உண்மையை எடுத்துக் கூறுகிறது. இது தமிழ்ப் பழமொழியான 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பதைப் போன்றது. இந்தியாவில் புத்தகம் என்பது சரஸ்வதி தெய்வமாகப் போற்றப்படுகிறது. ஆனால் இந்த அறிஞர்கள் இந்தியாவில் புத்தகம் மதிக்கப்படாமல் வாய்மொழியே மதிக்கப்பட்டதற்கு காரணமான மனநிலையை இந்த சுலோகம் காட்டுவதாக முடிவு செய்தனர். இது மேலைநாட்டு அறிஞர்களின் ஆய்வில் இந்தியா பற்றிய அவர்களின் புரிதலின் தன்மையைக் காட்டுகிறது.

அசோகருக்கு முன் எழுத்து இல்லை என்ற கருத்து

வேதம் என்பது எழுதாமல் வாய்மொழியாகவே கற்கப்பட்டது என்பதற்குப் பல குறிப்புகள் உள்ளன. எனவே சிலர் வடமொழிக்கு எழுத்து கிடையாதென்றும் வடமொழி நூல்கள் வாய்மொழியாகவே இருந்தன என்றும் அசோகரே பிராமி எழுத்தைக் கண்டுபிடித்தார் என்றும் அதன் பிறகே நூல்கள் எழுத்தால் எழுதப்பட்டன என்றும் சமணத் துறவிகள் அந்த எழுத்தைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்தனர் என்றும் கூறிவந்தனர். இதற்கு மாறுபட்ட சான்றுகள் கிடைத்தாலும் அவற்றை ஏற்காமல் அந்த சான்றுகளைப் பிற்காலத்துக்கு உரியனவாகச் சில காரணங்களைக் காட்டிக் கூறுவது வழக்கம். அர்த்தசாஸ்திரத்தில் எழுத்து பற்றி நிறையக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதன் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளப்படாமல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளப்பட்டது. பாணினியின் அஷ்டாத்யாயி என்ற வடமொழிப் பேரிலக்கண நூல் எழுத்தைக் குறிப்பிடுகிறது. இவர் அசோகரின் காலத்துக்கு முற்பட்டவர் என்பது மறுக்க முடியாதது. எனினும் சில மேலைநாட்டு அறிஞர்கள் அவர் எழுத்து எனக் கூறியது சமஸ்கிருத எழுத்தாக இல்லாமல் காந்தாரப் பகுதியில் நிலவிய அராமைக் எழுத்தாக இருக்க வேண்டும் என்று கூறியதை ரிச்சர்டு சாலமன் சுட்டிக் காட்டுகிறார்[21]. தமிழுக்குத் தொல்காப்பியம் போல சமஸ்கிருதத்துக்குப் பேரிலக்கணமாகத் திகழும் நூலை எழுதிய பாணினி சமஸ்கிருத எழுத்தைக் குறிப்பிடாமல் ஈரான் பகுதியைச் சேர்ந்த எழுத்தைக் குறிப்பிட்டார் என்ற வாதம் அவர்கள் மனப்பான்மையின் தன்மையையே காட்டுகிறது. அனுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் காலம் கரிமக் காலக்கணிப்பின்படி அசோகருக்கு முற்பட்டது என நிரூபிக்கப்பட்டது. எனினும் இவை கண்டுபிடிக்கப்பட்ட மண்ணடுக்கு பிற்காலத்ததாக இருக்கலாம் என்று கூறி ஒருசார் அறிஞர்கள் இந்தியாவில் அசோகருக்கு முன் யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது என்ற கருத்தில் உறுதியாக இருந்ததை ரிச்சர்டு சாலமன் விளக்கியிருக்கிறார்[22].

காலப்பழைமையை ஏற்க மறுத்தல்

அர்த்த சாஸ்திரம் சந்திர குப்த மௌரியர் காலத்தில் (கி.மு 4 ஆம் நூற்றாண்டு) சாணக்கியரால் இயற்றப்பட்டது என்பது மரபுக் கூற்று. இதற்கு உரிய அகச்சான்றுகள், புறச்சான்றுகள் பல உள்ளன. ஆனால் இவற்றில் எதையும் ஏற்க மறுத்து சில ஐயங்களைக் கூறி அறிஞர் விண்டர்நிட்ஸ்[23] அர்த்தசாஸ்த்திரத்தின் காலம் கி.பி 3 ஆம் நூற்றாண்டு என்றும் அதை எழுதியவர் சாணக்கியர் அல்ல,

கௌடில்யர் என்ற வேறொருவர் என்றும் கூறினார். இதை ஏற்றுக் கொண்ட மேலைநாட்டு அறிஞர்கள் இன்னும் சில காரணங்களைக் கூறி அதை இன்னும் பிற்காலத்துக்குக் கொண்டுவருகின்றனர். விண்டர்நிட்ஸ் கூறிய சில காரணங்கள் பின்வருமாறு: 'அர்த்த சாஸ்த்திரம் பல துறைகளையும் பற்றிக் கூறுகிறது. ஒரு தனிநபர் இத்தனை துறைகளில் அறிவு உடையவராக இருக்கமுடியாது', 'கௌடில்யர் என்ற பெயர் தவறான பொருள் கொண்டது. இதைச் சாணக்கியர் தனக்குப் பெயராக வைத்திருக்க முடியாது', 'இரசவாதம் பற்றிக் கூறப்பட்டுள்ளதால் இது பிற்காலத்தது', 'இந்த நூலில் பிராமணத் தாக்கம் அதிகமாக உள்ளது'. இப்படி பல வலுவற்ற கருத்துகளைத் தானும் கூறி, பிற அறிஞர்களின் இத்தகைய கருத்துகளையும் கூறி கடைசியாக இந்தக் காரணங்கள் எதுவும் திருப்திகரமாக நிருபிக்கத் தக்கவை அல்ல என்பதையும் ஒத்துக்கொள்கிறார் விண்டர்நிட்ஸ். ஆனால் பின்வந்தவர்கள் விண்டர்நிட்ஸ் கூறிய காலத்தை அறுதியான முடிவாக எடுத்துக் கொள்கிறார்கள். வையாபுரிப்பிள்ளையும்[24], செக்கோஸ்லோவாக்கியத் தமிழறிஞர் கமில் சுவலபிலும்[25] அர்த்தசாஸ்த்திரத்தில் கூறப்பட்ட 32 உக்திகள் தொல்காப்பியத்தில் கூறப்படுவதால் அர்த்தசாஸ்த்திரத்தின் காலமான கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது தொல்காப்பியம் என்று கூறியுள்ளனர். நிறுவப்படாமல் ஊகமாகக் கூறப்பட்டதை இவர்கள் ஆணித்தரமாக நிறுவப்பட்டது போல் எடுத்துக் கொள்கின்றனர். இது பொருந்தாத வாதம்.

வழிநூல்களை முதல்நூல்களாகக் கொள்ளல்

மனு தரும் நூல் மிகவும் பழைமையானது. அகச்சான்றுகளைக் கொண்டு வேதங்களுக்கும் இராமாயணத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் அது தோன்றியது எனலாம் (கி.மு. ஆயிரத்துக்கு முன்). பழங்கால இராமாயணத்தை தற்காலத்தில் அப்படியே உரைநடையில் மாற்றி எழுதுவது போல மனு தரும் நூலும் பிற்காலத்து சமஸ்கிருத நடையில் மாற்றி எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அதுவே இப்போது கிடைப்பது. இதன் காலம் கி.பி 2 ஆம் நூற்றாண்டு என்பது மேலைநாட்டு அறிஞர் சிலரது முடிவு. இது உண்மை எனக் கொண்டாலும் மனுநூல் கருத்துகளின் காலம் கி.மு.ஆயிரமே தவிர கி.பி. 200 அல்ல. தொல்காப்பியத்தில்,

"பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும்
நீத்தகன்று உறையார் என்மனார் புலவோர்
பரத்தையிற் பிரிந்த காலை யான"[26]

என்ற சூத்திரத்தின் கருத்து மனுநூல் சூத்திரங்கள் 3.46, 3.47 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது எனக் கூறி, தொல்காப்பியர் காலம் கி.பி 200 க்குப் பிற்பட்டது என வையாபுரிப் பிள்ளையும்[27], கமில் சுவலபிலும்[28] கூறுவர். மனுநூல் கூறுவதும் தொல்காப்பியம் கூறுவதும் தொடர்புடையதுதான் எனினும் வேறுபாடும் உள்ளது. மனுநூலின் கருத்தே அது எனக் கொண்டாலும் அது கி.மு. ஆயிரத்துக்கு உரியதே தவிர கி.பி. இருநூறுக்கு உரியது அல்ல. எனவே இந்த வாதம் பொருந்தாத ஒன்று.

முற்காலக் கருத்தை பிற்கால நூலின் கருத்தாகக் கூறல்

திருக்குறளின் பொருட்பால் அரசன் உள்ளிட்ட ஏழு அரச அங்கங்களை இவ்வாறு கூறுகிறது.

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" *(குறள் - 381)*

இதே கருத்து மனுநூலில்[29] அரசன், நட்பு மற்றும் ஐந்து அங்கங்களாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இதைக் கொண்டு மனுநூலில் காலம் என்று கூறப்படும் கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே திருக்குறள் தோன்றியது என்று ஒரு அறிஞர் கூறக்கூடும். ஆனால் இதே கருத்து அர்த்த சாஸ்த்திரத்தில் அரசனுடன் சேர்த்து அரசின் ஏழு அங்கங்களாகக் கூறப்பட்டுள்ளது[30]. அதற்கும் முற்பட்ட வால்மீகி இராமாயணத்திலும் இது சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஏழு வர்க்கங்களாகக் கூறப்பட்டுள்ளது[31]. எனவே பாரதத்தில் தொன்றுதொட்டு, இராமாயண காலத்திற்கு முன்பிருந்தே கூறப்பட்டுவருகின்ற ஒரு

கருத்தையே வள்ளுவர் கூறியுள்ளார் என்பதே சரியானது. மனுநூலில் கூறப்பட்டிருப்பதை வள்ளுவர் கூறியதால் அவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என ஒருவர் சொன்னால் அது முற்றிலும் பொருந்தாத வாதம். ஒருவேளை இராமாயணமும், அர்த்தசாஸ்த்திரமும் கிடைக்காமல் போயிருந்தால் மனுநூலைக் கொண்டு வள்ளுவர் பிற்பட்டவர் என்று அவர் உறுதியாக வாதிட வாய்ப்பாகும். இத்தகைய வாதத்தின் பொருந்தாத் தன்மையை விளக்க ஒரு எடுத்துக்காட்டாகவே இது கூறப்பட்டது. இதைப் போன்ற ஒரு வாதம் 'ஓரை' பற்றியது. 'ஓரை' எனப்படும் 'ஹோரா' என்ற வடசொல் ஒரு மணி நேரத்தைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது என்றும் கிரேக்க வானியற் சொற்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டை ஒட்டிய ஆர்யபட்டா, வராகமிகிரர் நூல்களில்தான் முதல்முதலில் காணப்படுவதால் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு அளவில்தான் கிரேக்க வானியல் கருத்துகள் இந்தியாவுக்கு வந்தன என்றும் சில மேலைநாட்டு அறிஞர்கள் கூறியிருந்தனர். எனவே இந்த சொல்லைப் பயன்படுத்தும் தொல்காப்பியம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன் தோன்றியிருக்க முடியாது என்று கே.என். சிவராஜப்பிள்ளை கூறினார்[32]. தொல்காப்பியத்தின் காலம் பற்றிப் பல கருத்துகளைக் கூறிய வையாபுரிப் பிள்ளையும்[33] இந்தக் கருத்தையும் துணைக்கொண்டு தொல்காப்பியத்தின் காலம் கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு என்று கூறினார். இவ்வாதத்தின் பொருந்தாத் தன்மையைக் காண்போம். வேத அங்கமான 'வேதாங்க ஜோதிஷம்' என்ற ஒரு நூல் உள்ளது. இதன் காலம் கி.மு. 1400 என்பர்[34]. இதன் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு கி.பி 5 ஆம் நூற்றாண்டு அளவில்தான் ஆர்யபட்டர், வராகமிகிரர் ஆகியோரின் வானியல் நூல்கள் கிடைக்கின்றன. இடைப்பட்ட காலத்தில் பல வானியல் நூல்கள் இருந்தன என்பது வராகமிகிரரின் நூல்களில் இருந்து தெளிவாக அறியப்படுகிறது[35] [36]. அவற்றுள் சூரிய சித்தாந்தம் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை. 'ஹோரா' என்ற சொல் மறைந்து போன பழைமையான இந்திய வானியல் நூல்களில் இருந்திருக்க வாய்ப்புண்டு. அது இங்கிருந்தே கிரேக்கத்துக்குச் சென்றிருக்கவும் வாய்ப்பு உண்டு. கிரேக்கத்தில் 'ஹோரா' என்பது ஒரு மணி நேரத்தைக் குறிப்பிடும். ஒரு இராசி என்பது இரண்டு மணி நேரம் கொண்டது. இதில் பாதி நேரமான ஒரு மணி நேரம் ஹோரையாகும். இந்த அடிப்படையில் இந்திய ஜோதிடத்தில் இராசிச் சக்கரம், ஹோரைச் சக்கரம் முதலியன உண்டு. ஆனால் பராசர முனிவர் எழுதிய 'பிருகத் ஹோரா சாஸ்த்திரம்' என்ற சோதிட நூலில் 'ஹோரா' என்பது ஒரு மணி நேரத்தைக் குறிப்பிடாமல், பொதுவான ஜோதிட சாத்திரத்தையே குறிக்கும். தொல்காப்பியத்தில் வரும் 'ஓரையும் நாளும்'[37] என்பதும் 'நல்ல நாள் நல்ல நேரம்' என்ற பொதுவான ஜோதிடத்தையே குறிக்கிறது. நச்சினார்க்கினியர் தன் தொல்காப்பிய உரையில் ஓரை என்பதை இராசியாகக் கொள்கிறார் (அகத்திணையியல் சூ.6). அக்காலத்தில் இருந்த பல நூல்களும் நமக்குக் கிடைத்தால்தான் நாம் இதுபற்றி ஆராய்ந்து திட்டவட்டமாக முடிவு செய்ய முடியும். ஓரிரு நூல்கள் மட்டுமே கிடைத்து மற்ற நூல்கள் எல்லாம் மறைந்து போய்விட்ட நிலையில் 'ஹோரா' என்ற சொல்லின் வரலாறும் அது எங்கிருந்து எங்கு சென்றது என்ற விளக்கமும் தெரியாமல் வராகமிகிரர் காலத்தில்தான் அது கிரேக்கத்தில் இருந்து இங்கே வந்தது என முடிவு செய்வதும் அதைக் கொண்டு தொல்காப்பியம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தோன்றியது என முடிவு செய்வதும் பொருந்தாத வாதங்கள். இரண்டு நூல்களுள் ஒரு நூலில் இருந்துதான் இன்னொரு நூலுக்கு வந்திருக்க வேண்டும் என்பதில்லை. பொதுவான ஒரு மூலத்தில் இருந்து இரண்டு நூலுக்கும் வந்திருக்கவும் முடியும். இந்த வாய்ப்பைப் கணக்கில் கொள்ளாததால் இத்தகைய காலக்கணிப்பு முறை தருக்க நெறிக்கு எதிரானது (illogical) என்பதும் முற்றிலும் தவறானது என்பதும் விளங்கும். இது கடலில் வெளிப்பட்டுத் தோன்றும் பனிப்பாறையின் முனையை மட்டும் கண்டு (tip of the iceberg) அதன் முழு அளவை மதிப்பிடுதல் போன்றது. வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதஞ்சலியம், பாணினியம், அர்த்தசாஸ்த்திரம், பரத முனிவரின் நாட்டிய சாஸ்த்திரம், காமசூத்திரம் ஆகியவற்றுடன் தொல்காப்பியத்தை ஒப்பிட்டு அவற்றுக்குப் பிற்பட்டது தொல்காப்பியம் எனக் கூறுவதும் இத்தகையதே. இதுபற்றி விரிவாகக் கூறுவதற்கு இச்சிறு கட்டுரை இடம் தராது.

ஒரே நூலைப் பலகாலத் தொகுப்பு எனக் கூறல்

ரிக் வேதம் தொகுக்கப்பட்ட ஒரு நூல். பல காலங்களில் வாழ்ந்த பல ரிஷிகள் பாடிய பாடல்களின் தொகுப்பு அது. எனவே அதில் காலத்தால் முற்பட்டவையும் உண்டு. பிற்பட்டவையும் உண்டு என்பது தெளிவு. ஆனால் தனி நூல்கள் இவ்வாறானவை அல்ல. மகாபாரதத்தின் மிகப் பெரிய அளவையும் பல்வேறு தன்மைகளையும் ஆராய்ந்த மேலைநாட்டு அறிஞர்கள் அது ஒருவரால் மட்டும் எழுதப்பட்டது அல்ல. ஒருவர் எழுதியதன் மேல் பலரும் பல காலங்களில் எழுதிச் சேர்த்தது; பல இடைச்செருகல்களைக் கொண்டது என்று கூறினர். இக்கருத்தைப் பொதுமையாக்கி இராமாயணம், மனு தர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம் போன்ற பல நூல்களும் இப்படிப்பட்டவை என்று கூறி அவற்றின் காலங்களை மிகப் பிற்பட்ட காலங்களாக்கிக் கூறினர். காலப்பழைமை காரணமாக பழைய நூல்களில் கூறப்பட்ட கருத்துகளில் சில நமக்குப் புரியாமல் இருப்பது இயற்கை. உடனே அவற்றைத் 'தவறுகள்', 'முரண்பாடுகள்', 'இடைச்செருகல்கள்' என்று முடிவு செய்வது பல அறிஞர்களின் வழக்கமாக உள்ளது. கமில் சுவலபில் தொல்காப்பியத்தைப் பற்றிக் கூறும்பொழுது, அது ஒருவரால் செய்யப்பட்டது அல்ல என்றும் அதன் பழைமையான பகுதிகள் கி.மு 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும் அது கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் இறுதி வடிவம் பெற்றது என்றும் கூறுகிறார்[38]. தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலியவற்றை நன்கு கற்ற தமிழறிஞர்களுக்கு இக்கருத்து எந்த அளவு ஏற்க முடியாதது என்பது வெளிப்படை.

மேலே கண்டவற்றால் தொல்காப்பியத்தைக் காலத்தால் மிகப்பிற்பட்டது என்று கூறுவதற்கு உரிய காரணங்களாகக் கூறப்படுபவை பொருந்தாதவை என உணரலாம், அசோகருக்கு முன்பு எழுத்து இல்லாததால் எழுத்தைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம் அசோகர் காலத்துக்கு முன் தோன்றியிருக்க முடியாது எனவும் கூறுவர். அதைப் பற்றி மேலே காண்போம்.

வேதங்களின் வாய்மொழி மரபும் எழுத்தும்

வேத மந்திரங்கள் ஸ்வரம் என்பதைக் கொண்டவை. அதாவது குறிப்பிட்ட எழுத்துகளை உயர்த்தியும் (உதாத்தம்) சிலவற்றை நடுவாகவும் (ஸ்வரிதம்), சிலவற்றை தாழ்த்தியும் (அனுதாத்தம்) ஒலிக்க வேண்டும். இது வேதகாலத்துக்கு முற்பட்ட சமஸ்கிருதத்துக்கு இருந்த ஒரு பண்பு. வேத மந்திர காலத்துக்குப் பிற்பட்ட சமஸ்கிருதத்தில் இது மறைந்துவிட்டது. இதை எழுத்தில் எழுத முடியாது என்பதால் நேரடியாக குருவிடம் வாய்மொழியாகக் கற்க வேண்டும். இதனால் வேதம் 'எழுதாக் கிளவி' எனப்பட்டது. இது வேத மந்திரங்களைக் கொண்ட சம்ஹிதைகளுக்கு மட்டும் பொருந்துமே தவிர மற்ற நூல்களுக்குப் பொருந்தாது. சங்க காலத்தில் எழுத்து நன்கு நிலைபெற்றிருந்தது. அக்காலத்திலும் வேதம் எழுதாமல் கற்கப்பட்டது.

".....
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொ ல்லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ இதுவே" *(குறுந்தொகை - 156)*

என்ற பாடல் மூலம் இதை அறியலாம். வேத மந்திரங்கள் ஏட்டில் எழுதப்படாததற்குத் திருவள்ளுவமாலை மேலும் ஒரு காரணம் கூறுகிறது.

"ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத்(து) ஏட்டின் புறத்தெழுதார் ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று" *(தி.மாலை- 15)*

வேதங்கள் எழுதப்படாததற்கு இவையே காரணங்கள் என்பதையும் எழுத்து இல்லாததால் அல்ல என்பதையும் வேத மந்திரங்கள் தவிர மற்றவை நூல்களாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் உணரலாம்.

வேத மந்திர சம்ஹிதைகளுக்குப் பின்னும் அசோகர் காலத்துக்கு முன்னும் வடமொழியில் தோன்றிய நூல்கள் பலப்பல. அவற்றுள் பல மறைந்துவிட்டது. பேரளவிலான இத்தனை நூல்களை எழுதாமலேயே வாய்மொழியாகப் பல நூற்றாண்டுகளாகக் கடத்துதல் என்பது சிறிதும் இயலாத ஒன்று என்பது திண்ணம்.

அசோகரது சாம்ராஜ்யம் தமிழ்நாடு நீங்கலாக இந்தியா முழுவதும் பரவி தற்கால ஆப்கானிஸ்தான் வரை இருந்தது. இது திடீரென ஒரு நாளில் ஏற்பட்டது அல்ல. நீண்ட காலமாக விரிவடைந்தே இந்த நிலையை எட்டியிருக்க முடியும். இவ்வளவு பெரிய மௌரிய அரசாங்கத்தை நிர்வகிக்க எழுத்து இல்லாமல் எப்படி முடியும்! வரி வசூல் கணக்குகள், அரசாங்க அதிகார இயந்திரம், அரச ஆணைகள், அவற்றைச் செயல்படுத்துதல் முதலியவற்றை எழுத்து இல்லாமல் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. பூலாங்குறிச்சிக் கல்வெட்டு, பள்ளன்கோயில் செப்பேடு, வேள்விக்குடிச் செப்பேடு ஆகியவை அக்காலங்களில் இருந்த அரசு ஆவண முறைகள், அரசு இயந்திரச் செயல்பாடு பற்றிக் காட்டுகின்றன. அர்த்தசாஸ்திரம் இவற்றை மிகவும் விரிவாகக் கூறுகிறது. அரசாட்சிக்குத் தேவையான இவை மிகப் பழங்காலம் முதல் இருந்திருக்க வேண்டும். எழுத்து இல்லாமல் இவை செயல்பட முடியாது. தமிழும், வடமொழியும் மிகவும் பழைமை வாய்ந்தவை என்பதால் இவற்றுக்கு மிகப்பழங்காலம் முதல் ஓவிய எழுத்துகள், குறியீட்டு எழுத்துகள் இருந்து பின் ஒலியியல் எழுத்துகள் தோன்றியிருக்கக் கூடும். தமிழ்நாட்டில் மிகுதியாகக் கிடைக்கும் கீறல் குறியீடுகள் (Graffiti symbols) இக்கருத்துக்கு வலு சேர்க்கின்றன.

கே.வி.சுப்ரமணிய ஐயரை ஜேம்ஸ் பிரின்செப், பூலர் ஆகியோரோடு ஒப்பிட்டுப் பாராட்டுவார் ஐராவதம் மகாதேவன்39. அத்தகைய தலைசிறந்த அறிஞரான பூலர் பட்டிப்புரோலு எழுத்தை ஆராய்ந்தபின், 'இத்தகைய மாறுபட்ட முறைகள் தோன்றி, எழுத்துகளில் மாற்றங்கள் முதலியன பெற்று, மக்களிடம் நிலைபெற பல நூற்றாண்டுகள் ஆகும்' என்றும் 'அசோகருக்கு முன்பாக, சந்திரகுப்த மௌரியருக்கும் பலகாலம் முன்பாகவே பிராமி எழுத்து தோன்றியிருக்க வேண்டும்'[40] என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அசோகருக்கு முன் எழுத்து இல்லை என்ற கொள்கையே வலுவாக இருந்தது.

தலைகீழாக்கிய தமிழ்நாட்டுக் கண்டுபிடிப்பு

இந்நிலையில் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் கண்ட முடிவுகள் எழுத்தைப் பற்றிக் கூறப்பட்டுவந்த பல்வேறு கருத்துகளை உடைத்துச் சுக்குநூறாக்கின. பொருந்தல், கொடுமணல், கீழடி ஆகிய இடங்களில் தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புகளுடன் சேர்ந்து கிடைத்த கரிமப்பொருட்கள் கரிமக் காலக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்டபொழுது அவற்றுள் பலவற்றின் காலங்கள் அசோகர் காலத்துக்கு மிகவும் முற்பட்டவையாக இருந்தன[41]. பொருந்தல் எழுத்துப்பொறிப்புகளின் அதிகபட்ச காலம் கி.மு. 490; கொடுமணல் எழுத்துப்பொறிப்புகளின் அதிகபட்ச காலம் கிமு.408. இதன்பிறகு கீழடியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வு மிகப்பெரிய முடிவைத் தந்தது. கீழடி எழுத்துப்பொறிப்புகளின் அதிகபட்ச காலம் கி.மு 580. இவ்வாறாக, தமிழ்பிராமி எழுத்து அசோகர் காலத்துக்கு மிகவும் முற்பட்டது என்பது வெளிச்சத்துக்கு வந்தது. அசோகருக்கு முன்பு எழுத்து இல்லை என்ற கருத்தும் அதன் அடிப்படையில் கூறப்பட்ட பல்வேறு கருத்துகளும் உண்மையல்ல என்று தெளிவாகிவிட்டது.

இந்த முடிவுகளை மனதில் கொண்டு ஐராவதம் மகாதேவன் அவர்கள் தொல்காப்பியம் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தது என முடிவு செய்தது பற்றி ஆராய்வோம்.

காலத்தால் முற்பட்ட தமிழ்பிராமி வகை

தமிழ்பிராமி I வகையே முதலில் தோன்றியது எனக் கூறிய ஐராவதம் மகாதேவன் பின்பு அதைத் மாற்றி தமிழ்பிராமி I மற்றும் II ஆகியவை சமகாலத்தில் தோன்றியவை என்று கூறினார். தற்போது கொடுமணல், பொருந்தல், கீழடி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் வெளியிடப்பட்டவை அனைத்தும் தமிழ்பிராமி II வகையைச் சேர்ந்தவனவாகவே காணப்படுகின்றன. சமணம் தமிழ்நாட்டுக்குப் பிற்காலத்தில் வந்தது என்பதால் மாங்குளம் போன்ற இடங்களில் உள்ள சமணர் குகைகளில் காணப்படும் முதலாம் வகைக் கல்வெட்டுகள் பிற்காலத்தவை எனத் தெளிவாகிறது. இரண்டாம் வகைக் கல்வெட்டுகளே முற்காலத்தில் காணப்படுகின்றன. பிராமியில் இருந்து இந்த இரண்டாம் வகை நேரடியாக வந்ததா என்பதும் இரண்டாம் வகையும் மூன்றாம் வகையும் வேறுபட்டவைகளா அல்லது ஒரே வகையின் வெவ்வேறு வடிவங்களா என்பதும் ஆராயப்பட வேண்டியவை. இரண்டாம் வகைக்கும் மூன்றாம் வகைக்கும் உள்ள வேறுபாடு புள்ளிதான். எனவே தமிழ் எழுத்து வரலாற்றில் புள்ளி பயன்பட்ட விதத்தை ஆராயவேண்டி உள்ளது.

புள்ளிக் குழப்பம்

தமிழ் எழுத்து வரலாற்றின் நெடுகிலும் எழுத்துகளுக்குப் புள்ளியிடுதல் ஒரு சிக்கலாகவே இருந்து வந்துள்ளது எனலாம். மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடலும் எகர ஒகரக் குறில்களுக்குப் புள்ளியிடலும் தமிழின் பொதுவான எழுத்துமுறை ஆகும். தொல்காப்பியர் காலத்தில் மகரக்குறுக்கத்துக்கும் புள்ளி இடப்பட்டது எனத் தெரிகிறது[42]. குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவற்றுக்கும் புள்ளி இடப்பட்டிருக்க வேண்டும். புள்ளியிடப்பட்ட எழுத்துகள் மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும் என்பது பொதுவான கொள்கையாக இருந்துள்ளது.

பிராமிக் கல்வெட்டுகளின் காலத்திற்குப் பின்பு தோன்றிய கல்வெட்டுகள், செப்பேடுகளில், பொதுவாக, மெய்யெழுத்துகளும் எகர, ஒகரங்களும் புள்ளி பெற்றுக் காணப்படுகின்றன. பூலாங்குறிச்சிக் கல்வெட்டு[43], பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு[44], சிம்மவர்மப் பல்லவனின் பள்ளன் கோயில் செப்பேடு[45], பராந்தக நெடுஞ்சடைய பாண்டியனின் வேள்விக்குடிச் செப்பேடு[46] போன்றவற்றில் இவ்வாறு காணலாம். ஆனால் இப்போது அச்சில் தவறாமல் புள்ளியிடுவது போன்ற ஒரு நிலை இவற்றில் இல்லை. சில இடங்களில் புள்ளி இருக்கும்; சில இடங்களில் இருக்காது. புள்ளிகளைத் தவிர்த்துவிட்டு எழுதுவதும், படிப்போர் அதை ஊகித்துப் புரிந்து கொள்வதும் மிகவும் இயல்பாக இருந்துள்ளது. தமிழில் 'ஔவையார்' என்பதை அனைவரும் 'ஔ'வையார் (Avvaiyar) என்றுதான் படிக்கிறோம். 'ஒ"ள'வையார் (Olavaiyar) என்று படிப்பதில்லை. 'ஒ"ள' (ola) எனத் தொடங்கும் சொற்கள் தமிழில் இல்லாததால் குழப்பம் ஏற்படுவதில்லை. இவ்வாறே, தமிழ் மொழியின் தன்மை காரணமாக, 'க்க', 'த்த', 'ச்ச', 'ட்ட' போன்ற இடங்களில் புள்ளியிடாமல் எழுதினாலும் படிப்போர் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். ஓலைச்சுவடிகளில் எழுதும்பொழுது புள்ளிகள் எழுதும் வேகத்தைக் குறைக்கக் கூடியவை. இப்போது போல அப்போது அச்சு இயந்திரம் இல்லாததால் அக்காலத்தில் ஒருவர் ஒரு நூலைப் படைத்து அரங்கேற்றினால் நூலைப் படியெடுப்பவர்கள் அந்த நூலின் பல படிகளை எழுதி உருவாக்குவார்கள். அவை மக்கள் பலரிடம் செல்லும். இவ்வாறு மிகப்பல படிகளை எழுத மிகுந்த வேகம் வேண்டும். புள்ளிகள் வேகத்தைக் குறைப்பதால் புள்ளிகளைக் தவிர்த்து எழுதும் பழக்கம் தோன்றியது என்பது தெளிவு. வேகக்குறைவைத் தவிர்ப்பதற்காக முதலில் 'க்க', 'ச்ச', 'ட்ட', 'த்த' போன்ற எளிதில் புரியக்கூடிய இடங்களில் புள்ளியைத் தவிர்க்கும் பழக்கம் ஏற்பட்டு, பிறகு எல்லா இடங்களிலும் புள்ளியைத் தவிர்க்கும் பழக்கம் வந்திருக்கக்கூடும்.

தமிழ்பிராமி II மற்றும் தமிழ்பிராமி III

இரண்டாம் வகைத் தமிழ்பிராமியையும் மூன்றாம் வகைத் தமிழ்பிராமியையும் இரண்டு வேறுபட்ட முறைகளாகக் கருதாமல் ஒரே முறையாகக் கருத முடியும் என்ற கருத்தையும் ஜராவதம் மகாதேவன் முன்வைக்கிறார்[47]. மூன்றாம் வகை தமிழ்பிராமியில் புள்ளிகளைத் தவிர்த்து எழுதினால் அது இரண்டாம் வகைத் தமிழ்பிராமி ஆகிவிடும். இந்தப் பின்னணியில் நான் பின்வரும் கருதுகோளை முன்வைக்கிறேன்.

முதலில் தோன்றிய தமிழ்பிராமி

இக்கருதுகோளின்படி மூன்றாம் வகைத் தமிழ்பிராமியே முதலில் தோன்றியது. பிராமியில் இருந்து தமிழ்பிராமியை உருவாக்கி நாடெங்கும் மக்களிடம் பரப்பச் செய்யும்பொழுது குழப்பமில்லாத, குறைந்தபட்ச மாற்றங்களை பிராமியில் செய்வதே இயல்பானது. இரண்டாம் வகைப்பிராமியின் புள்ளியற்ற முறை இதற்கு மாறான குழப்பமான முறையாகும். இப்படிச் செய்தல் இயற்கையாக நடைபெறும் நிகழ்வாக இருக்க முடியாது. மாறாக பிராமியில் இருந்து மூன்றாம் வகைத் தமிழ்பிராமியை உருவாக்குவது எளிதானது, குழப்பம் இல்லாதது. பிராமியில் அநுஸ்வாரத்துக்கு புள்ளியிட வேண்டி இருந்ததால் சொல்லின் கடைசியில் நிற்கும் மெய்யெழுத்துக்கு அருகில் புள்ளிக்குப் பதிலாக சிறு கோடு இடப்பட்டது (பிராகிருதத்தில் மெய்யெழுத்து இவ்வாறு வராது என்பதால் சமஸ்கிருதக் கல்வெட்டுகளில் இதைக் காணலாம்). தமிழில் அநுஸ்வாரம் இல்லை என்பதால் அவற்றுக்குப் பதிலாக மெய்யெழுத்துகள் மேல் புள்ளிகள் இடப்பட்டன. மெய்யெழுத்துகள் தெளிவாகக் காட்டப்பட்டதால் கூட்டெழுத்துகள் தேவையில்லை. மிகவும் நேரடியான, தெளிவான முறை இது. எனினும் பிற்காலத்தில் புள்ளி தவிர்த்து எழுதப்பட்டது போல இந்தத் மூன்றாம் வகைத் தமிழ்பிராமி எழுத்தும் நாளடைவில் புள்ளியைத் தவிர்த்து எழுதப்பட்டது. இந்நிலையில் அது இரண்டாம் வகைத் தமிழ்பிராமியாகக் காணப்படுகிறது. சில காலத்துக்குப்பின் இந்தத் தெளிவின்மையை போக்க புள்ளி தேவைப்படாத முறையான பட்டிப்புரோலு பிராமியும் முதல்வகை தமிழ்பிராமியும், ஏறத்தாழ கி.மு 2 ஆம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்க வேண்டும். இதிலும் குழப்பம் ஏற்பட்டதால் சிறிது காலத்தில் இந்த முறையும் கைவிடப்பட்டு மீண்டும் மூன்றாம் வகைத் தமிழ் பிராமியே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். நெகனூர்ப்பட்டி, பூலாங்குறிச்சி, பிள்ளையார்பட்டிக் கல்வெட்டுகள், பள்ளன்கோவில் செப்பேடு, வேள்விக்குடிச் செப்பேடு முதலியவற்றில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. எனினும் புள்ளியிடாமல் எழுதும் பழக்கம் மீண்டும் ஏற்பட்டு அச்சு இயந்திரம் வரும்வரை நிலைபெற்றதைக் காண்கிறோம்.

தமிழ்பிராமியில் இருந்தே பிராமி வந்தது என்று கருதும் அறிஞர்களும் உண்டு. ஆனால் எகர, ஒகரக் குறில்களுக்கு தமிழ்பிராமியில் குறியீடுகள் இல்லாததும், தமிழ்பிராமியை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட குழப்பங்களும், பிராமியில் இத்தகைய குழப்பங்கள் இல்லாததும் பிராமியில் இருந்தே தமிழ்பிராமி வந்தது என்று காட்டுகின்றன. எனினும் வருங்காலத்தில் இன்னும் பல ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றால் அவற்றின் அடிப்படையில் இக்கருத்து மாறவும் கூடும்.

தொல்காப்பியர் காலம்

இயற்றமிழுக்கும் நடைமுறைத் தமிழுக்கும் எப்போதுமே வேறுபாடு உண்டு. செய்யுளில் 'கொடுத்த' என வருவது கல்வெட்டுகளில் 'குடுத்த' எனக் கொச்சையாக வரும். செய்யுளில் வடமொழிக்குரிய ஒலிகள் கொண்ட வடமொழிச்சொற்கள் தமிழுக்கேற்ப மாற்றப்பட்டே இடம் பெறும். கல்வெட்டுகளில் அவை அப்படியே இடம் பெறும். சமகாலத்திற்குரிய சங்க இலக்கியத்தின் தமிழுக்கும், தமிழ்பிராமிக் கல்வெட்டுகளின் தமிழுக்கும் பெரும் வேறுபாடுகள் உண்டு. நேரிய முறைக்கும் நடைமுறை முறைக்கும் உள்ள வேறுபாடுகள் இவை. தொல்காப்பியம் மெய்யெழுத்துகளைப் பற்றி நேரிய முறையில் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் இது பின்பற்றப்படாமல் புள்ளியைத் தவிர்த்து எழுதும் பழக்கமே அக்காலக்

கல்வெட்டுகளில் நிலவியது. இவ்வாறு கொண்டால் எழுத்துகளில் புள்ளி இருப்பதையும் இல்லாததையும் வைத்துத் தொல்காப்பியத்தின் காலத்தை முடிவு செய்ய வேண்டியதில்லை. தொல்காப்பியத்தின் காலம் இராசமாணிக்கனார் கூறியபடி கி.மு 4 ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. தமிழறிஞர்களின் ஆராய்ச்சி முடிவுக்கு மாறாக, தொல்காப்பியம் சங்க காலத்துக்குப் பின்னால் கி.பி 2 ஆம் நூற்றாண்டு முதல் 4 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் தோன்றியது என்று ஐராவதம் மகாதேவன் அவர்கள் செய்த முடிவும் மாற்றப்படும்.

முடிவுரை

புதிய ஆதாரங்கள் கிடைக்கக் கிடைக்க புதிய முடிவுகள் கிடைப்பது வழக்கம். அந்த வகையில் புதிய ஆதாரங்களின் துணையுடன் மேலே கூறப்பட்ட கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அறிஞர் உலகம் இதை ஆராய்ந்து சரியாக இருப்பின் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

மேற்கோள்கள்

1. Abhijnana Sakuntalam, Ramendra Mohan Bose, Tr, 1931, p. Dramatis Personae.
2. Richard Solomon, Indian Epigraphy, 1998, p. 86.
3. Iravatham Mahadevan, Early Tamil Epigraphy, 2003, p.226.
4. Ibid, p. 227.
5. Ibid, p. 227.
6. Ibid, p. 229.
7. Ibid, p. 230
8. Ibid, p. 86-87.
9. Ibid, p. 231-234.
10. Ibid, p.231.
11. K. N. Sivaraja pillai, The chronology of the early Tamils, 1932. pp . 263-264.
12. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), 1949. பக்.39.
13. இராகவையங்கார், மு., ஆராய்ச்சித் தொகுதி, 1938, பக். 101- 120.
14. இராகவையங்கார், ரா., தமிழ் வரலாறு, 2014, பக்.243-260, 334 - 337.
15. மயிலை சீனி. வேங்கடசாமி, ஆய்வுக் களஞ்சியம் - 6 (பண்டைத் தமிழ் நூல்கள் - கால ஆராய்ச்சி - இலக்கிய ஆராய்ச்சி), 2014, பக். 22-63.
16. இலக்குவனார், சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, 1961, பக் 11-31.
17. வெள்ளைவாரணன், க., தொல்காப்பியம் (வரலாறு), 1978. பக். 86-95.
18. இராசமாணிக்கனார், மா., கால ஆராய்ச்சி, பக். 14-31.
19. Kamil Zvelebil, The smile of Murugan, 1973, p. 131- 147.
20. Richard Solomon, Indian Epigraphy, 1998, pp.7-8
21. Richard Solomon, Indian Epigraphy, 1998, p. 11-12.
22. Richard Solomon, Indian Epigraphy, 1998, p. 14.
23. Winternitz, M., History of Indian Literature - Vol.III, Tr. Subhadra Jha, Motilas Banarasidass, Delhi, 1985.p. 627-633.
24. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), 1949, பக்.36.
25. Kamil Zvelebil, The smile of Murugan, 1973, p. 144.
26. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல் சூ. 46.
27. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), 1949, பக்.36.
28. Kamil Zvelebil, The smile of Murugan, 1973, p. 144.

29. Buhler, G. (Tr), The Laws of Manu, 1886, Ch.7.157, 7.158.
30. Arthashastra, R.Shamasastry (Tr), 1915, Book 6 Ch. 1 Sl.1.
31. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - அயோத்தியா காண்டம் - பகுதி-2, P.S.கிருஷ்ணசாமி ஐயர் (மொ-ர்), 1968, சர்க. 100 சுலோ. 68 பக்.370-371.
32. Sivaraja pillai, K. N., The chronology of the early Tamils, 1932. pp. 263-264.
33. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), 1949, பக்.39.
34. Vedanga Jyotisa of Lagadha, Tr. T.S.Kuppanna Sastry, 1985, p.13.
35. Brihat Samhita of Varaha Mihira, Tr. N.Chidambaram Ayyar, 1884, p. 57.
36. Pancha Siddhantika of Varaha Mihira, Tr. G Thaibaut, 1889,Translation p.1/3.
37. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் சூ.45.
38. Kamil Zvelebil, The smile of Murugan, 1973. p. 146-147.
39. Iravatham Mahadevan, Early Tamil Epigraphy, 2003, p. 75.
40. Epigraphia Indica Vol 2, Archeological Survey of India, p.325.
41. K. Rajan et al, Recent radiometric dates and their implications in understanding the early writing system and early historic archaeology of Tamilnadu, 2021, pp. 66-78.
42. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூல் மரபு சூ. 13-14.
43. https://www.tamilvu.org/tdb/titles_cont/inscription/html/pulankuricci_inscriptions.htm
44. http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=607
45. பல்லவர் செப்பேடுகள் முப்பது, 1999 பக். 7.
46. பாண்டியர் செப்பேடுகள் பத்து, 1999, பக். 4.
47. Iravatham Mahadevan, Early Tamil Epigraphy, 2003, p.230.

துணை நூல் பட்டியல்

1. இராகவையங்கார், மு., ஆராய்ச்சித் தொகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 1938, நிழற்படப் பதிப்பு 2014.
2. இராகவையங்கார், ரா., தமிழ் வரலாறு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2014, சென்னை,
3. இராசமாணிக்கனார், மா., கால ஆராய்ச்சி, அலமு பதிப்பகம்,சென்னை,
4. இலக்குவனார், சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961.
5. குறுந்தொகை.
6. தமிழ் பிராமிக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை,சென்னை, 2006.
7. திருவள்ளுவ மாலை.
8. தொல்காப்பியம்.
9. பல்லவர் செப்பேடுகள் முப்பது, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
10. பாண்டியர் செப்பேடுகள் பத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
11. வெள்ளைவாரணன், க., தொல்காப்பியம் (வரலாறு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1978.
12. வேங்கடசாமி, மயிலை சீனி., மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம் - 6 (பண்டைத் தமிழ் நூல்கள் - கால ஆராய்ச்சி -இலக்கிய ஆராய்ச்சி, இளங்கணி பதிப்பகம், சென்னை,2014.
13. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ்ச் சுடர் மணிகள் (முதற் கோவை), குமரி மலர்க் காரியாலயம், சென்னை, 1949.
14. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - அயோத்தியா காண்டம் - பகுதி-2, P.S.கிருஷ்ணசாமி ஐயர் (மொ-ர்), ஸ்ரீராம் பப்ளிஷர்ஸ், சென்னை, 1968.100.68 பக்.370-371.

15. Abhijnana Sakuntalam, Ramendra Mohan Bose, Tr, Modern Book Agency Private Ltd, Culcutta, 1931.
16. Arthashastra, R. Shamasastry (Tr), Government Press, Bangalore, 1915.
17. Brihat Samhita of Varaha Mihira, Tr. N.Chidambaram Ayyar, Maduram, 1884.
18. Buhler, G. (Tr), (1886), The Laws of Manu, Sacred Books of the East series Vol. 25, London.
19. Epigraphia Indica Vol.2, Archeological Survey of India, Culcutta, 1894.
20. Iravatham Mahadevan, Early Tamil Epigraphy, Harvard University Press, 2003.
21. Kamil Zvelebil, The smile of Murugan, E.J.Brill, Leiden, 1973.
22. Pancha Siddhantika of Varaha Mihira, Tr. G Thaibaut, E.J.Lazurus and Co., Benaras, 1889.
23. Rajan K, et al, Recent radiometric dates and their implications in understanding the ealy writing system and early historic Archaeology of Tamilnadu, Man and Environment XLVI (1), 2021,
24. Richard Solomon, Indian Epigraphy, Oxford University Press, 1998.
25. Sivaraja pillai, K.N., The chronology of the early Tamils, University of Madras, Chennai, 1932.
26. Vedanga Jyotisa of Lagadha, Tr. T.S.Kuppanna Sastry, Indian National Science Academy, New Delhi, 1985.
27. Winternitz, M., History of Indian Literature – Vol.III, Tr. Subhadra Jha, Motilas Banarasidass, Delhi, 1985.p. 627-633.